Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 7 / 2023

**DEPOSITION OF PROCECUSION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஆனந்தன் | Calling: | ஓய்வு ஆசிரியர் |
| Father's/Husband's Name: | சங்கா ரெட்டி கவுண்டர் | Religion: | |
| Village: | கொத்த கோட்டை | Age: | 65 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 10.06.2025

(எதிரிகள் ஆஜர், கு.வி.மு.ச 311 பிரிவின் படி மனுத்தாக்கல் செய்யபட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை )

அ.சா. 1 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரிகள் என் நிலத்திற்கு பக்கத்து நிலத்துகாரர்களா என்றால் இல்லை. எனது நிலம் மேட்டு பகுதியில் அமைந்து உள்ளது என்றாலும் எதிரிகளின் நிலம் பள்ளத்தில் உள்ளது என்றாலும் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலப்பிரச்சனை சம்மந்தமாக ஊர்காரர்கள் முன்நிலையில் பஞ்சாயத்து பேசபட்டது என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே அடிக்கடி நிலப்பிரச்சனை சம்மந்தமாக சண்டை ஏற்படும் என்றால் சரிதான். அதற்காக காவல் நிலையத்தில் சமாதானம் பேசி வைப்பார்கள் என்றால் சரிதான். நான் தான் புகார் கொடுத்தேன். இந்த வழக்கில் மணி என்பவரை தெரியுமா என்றால் தெரியும்.இந்த நீதிமன்றத்தில் எதிரிகளை தாக்கியதற்காக எங்கள் மீது வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். சம்பவம் அன்று நான் தான் சென்று அவர்கள் நிலத்தில் மரங்களை வெட்டினேனா என்றால் சரியல்ல. அவர்கள் தான் எங்களின் மரத்தை வெட்டினார்கள். அப்போது தான் நான் மணி என்பவரின் வலது கையை கத்தியால் வெட்டினேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் தான் மோனிஷ் என்பவர் சம்பவத்தின் போது மண் வெட்டியால் சிவலிங்கம் என்பவரை வெட்டினாரா என்றால் இல்லை, அவர் வெட்டியதால் தான் சிவலிங்கம் என்பவருக்கு மோதிர விரலில் வெட்டுகாயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. அரவிந்த் என்பவர் இரும்பு

ராடால் தேவராஜ் என்பவரை அடித்தாரா என்றால் இல்லை. வேல்முருகன் பேசிக்கொண்டிருக்கும் போதே அரவிந்தும், தேவராஜ் உம் வேல் முருகனை அடித்தாரா என்றால் இல்லை. நான் மருத்துவனைக்கு சிகிச்சைக்கு சேரும் போது எந்த இடத்தில் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகள் என் தலைமீது அடித்த உடன் நான் மயக்கமாகிவிட்டேன் என்றால் சரிதான். நான் மயக்கமாகிவிட்டதால் அதன் பின்னிட்டு என்ன நடந்தது என்று என்னால் கூற முடியாது என்றால் எனக்கு நினைவிருந்தது. எதிரிகள் என்னை அடித்ததும் என் உடன் இருந்தவர்கள் சத்தம் போட்டார்களா என்றால் சரிதான். அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்ட உடன் எதிரிகள் ஓடிவிட்டார்களா என்றால் அடித்து விட்டு ஓடி விட்டார்கள். நான் மருத்துமனைக்கு செல்வதற்கு முன் ஆஜர் எதிரிகள் அனைவரும் மருத்துவமணையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்களா என்றால் இருவரும் ஒன்றாகதான் சென்றோம். எதிரிகளுக்கும் இரத்த காயம் கைகளில் ஏற்பட்டு இருந்ததா என்றால் இருந்தது. எங்களுக்கு எதுவும் இரத்த காயம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் ஆசிரியர் என்பதால் தான் எதிரிகள் மீது நான் கொடுத்த புகாரை எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் என் நிலத்தில் களையெடுக்க செல்லவேண்டும் என்றால் கத்தி, கடப்பாறை , மண்வெட்டி ஆகியவற்றை எடுத்து கொண்டு சென்றேனா என்றால் களைக்கொத்தி மட்டும் தான் எடுத்துச்சென்றேன். என் மருமகள் பெயர் என்னவென்றால் மீனா. எனக்கு உயிர் பயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. அது பற்றி நான் கொடுத்த புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலீஸார் என்னிடம் எத்தனை வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் இரண்டு, இரண்டு வாக்குமூலத்திலும் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றாலும், அசிங்கமாக பேசவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் தான் எதிரிகளை தாக்கிவிட்டு ஓடும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ஆனந்தன்

SRIPATHI K Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 7 / 2023

**DEPOSITION OF PROCECUSION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | அரவிந்த்குமார் | Calling: | செவிலியர் |
| Father's/Husband's Name: | ஆனந்தன் | Religion: | |
| Village: | கொத்த கோட்டை | Age: | 30 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 10.06.2025

(எதிரிகள் ஆஜர், கு.வி.மு.ச 311 பிரிவின் படி மனுத்தாக்கல் செய்யபட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை )

அ.சா. 2 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரிகள் என் நிலத்திற்கு பக்கத்து நிலத்துகாரர்களா என்றால் 30 அடி தள்ளி இருக்கும். எனது நிலம் மேட்டு பகுதியில் அமைந்து உள்ளது என்றாலும் எதிரிகளின் நிலம் பள்ளத்தில் உள்ளது என்றாலும் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலப்பிரச்சனை சம்மந்தமாக ஊர்காரர்கள் முன்நிலையில் பஞ்சாயத்து பேசபட்டது என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே அடிக்கடி நிலப்பிரச்சனை சம்மந்தமாக சண்டை ஏற்படும் என்றால் சரிதான். அதற்காக காவல் நிலையத்தில் சமாதானம் பேசி வைப்பார்கள் என்றால் சரிதான். நான் தான் வேல்முருகனையும் தேவராஜ் ஆகியோரை நான் இரும்பு ராடால் அடித்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா தான் மணி என்பவரின் வலது கையை வெட்டினாரா என்றால் சரியல்ல. மோனிஷ் என்பவர் சிவலிங்கத்தை மோதிர விரலில் வெட்டினார் என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் அடித்து காயம் ஏற்பட்டு மருத்துவணையில் இருந்தார்கள் என்றால் நாங்கள் ஏதுவும் அடிக்கவில்லை. இந்த நீதிமன்றத்தில் எதிரிகளை தாக்கியதற்காக எங்கள் மீது வழக்கு நடந்து வருகிறது என்றால் அதுகுறித்து தெரியாது. என் அப்பாவிற்கு தலையில் காயம் ஏற்பட்ட உடன் அவருக்கு மயக்கம் ஏற்பட்டதுஎன்றால் சரிதான்.அந்த காயத்தால் அவர் சட்டை முழுவதும் இரத்ததால் நனைந்து விட்டது

என்றால் சரிதான். மருத்துவமனைக்கு போகும் வரை அவர் மயக்கமாக இருந்தாரா என்றால் ஆமாம். மருத்துவருக்கு அடிப்பட்ட விவரத்தை நான் தான் கூறினேனா என்றால் சரிதான். போலீஸ்கார் விசாரணைக்கு மருத்துவமணைக்கு வரும்போது மயக்கம் தெளிந்த உடன் என் அப்பா தான் விவரத்தை கூறினாரா என்றால் சரிதான். என் அப்பா மயக்கம் அடைந்துவிட்டதால் அதன் பின்னிட்டு நடந்த சம்பவம் பற்றி மருத்துவனைக்கு அழைத்து சென்றது வரை நினைவில் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் எதிரிகளை தாக்கிவிட்டு ஓடும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது ஒரு பொய்யான சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சரியல்ல. வேல் முருகன் என்பவர் என்னை இரும்பு ராடால் கன்னத்திலும் கையிலும் அடித்துள்ள விவரத்தை போலீஸாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். என் அண்ணன் மோனிஷ்சையும் என் மனைவி மீனாவையும் என் அம்மா ராணியையும் எதிரிகள் அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, அடித்தார்கள். நாங்கள் மருத்துவமணைக்கு செல்லும் முன்பே எதிரிகள் மருத்துமணையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் முதலில் சென்றோம். போலீஸார் மருத்துவமணையில் இருந்த போது வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் வாங்கினாரா என்றால் சரிதான். எதிரிகள் நிலத்தில் உள்ள மரங்களை நாங்கள் தான் வெட்டினோமா என்றால் சரியல்ல, எதிரிகள் தான் எங்கள் நிலத்தில் உள்ள மரங்களை வெட்டினார்கள் என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் எதிரிகள் தான் கானாத்தில் உள்ள பொறம்போக்கு இடத்தில் உள்ள மரங்களை வெட்டினார்கள் என்று கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரிகளை நாங்கள் தான் தாக்கினோம் என்றாலும், எதிரிகள் எங்கள் மீது கொடுத்த வழக்கில் இருந்து தற்காப்பிற்காக எதிரிகள் மீது பொய்யான புகாரை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அரவிந்த்குமார்

SRIPATHI K Digitally signed by SRIPATHI K

Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 7 / 2023

**DEPOSITION OF PROCECUSION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | மோனிஷ் | Calling: | வங்கி ஊழியர் |
| Father's/Husband's Name: | ஆனந்தன் | Religion: | |
| Village: | கொத்த கோட்டை | Age: | 35 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 10.06.2025

(எதிரிகள் ஆஜர், கு.வி.மு.ச 311 பிரிவின் படி மனுத்தாக்கல் செய்யபட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை )

அ.சா. 3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே அடிக்கடி நிலப்பிரச்சனை சம்மந்தமாக சண்டை ஏற்படும் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலப்பிரச்சனை சம்மந்தமாக ஊர்காரர்கள் முன்நிலையில் பஞ்சாயத்து பேசபட்டது என்றால் சரிதான். எங்களது நிலம் மேட்டு பகுதியில் அமைந்து உள்ளது என்றாலும் எதிரிகளின் நிலம் பள்ளத்தில் உள்ளது என்றால் சரிதான் .எதிரிகள் நிலத்தில் உள்ள மரங்களை நாங்கள் தான் வெட்டினோமா என்றால் சரியல்ல, எதிரிகள் தான் எங்கள் நிலத்தில் உள்ள மரங்களை வெட்டினார்கள் என்றால் சரிதான். என் அப்பா ஆனந்தன் என்பவர் தான் மணி என்பவரின் வலது கையை வெட்டினாரா என்றால் சரியல்ல. நான் தான் மணி என்பவரை மோதிர விரலில் வெட்டினேனா என்றால் சரியல்ல.என் அப்பாவிற்கு தலையில் காயம் ஏற்பட்ட உடன் அவருக்கு மயக்கம் ஏற்பட்டதுஎன்றால் சரிதான். என் அப்பா மருத்துவமணைக்கு செல்லும் வரை மயக்க நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா மயக்கம் அடைந்துவிட்டதால் அதன் பின்னிட்டு நடந்த சம்பவம் பற்றி மருத்துவனைக்கு அழைத்து சென்றது வரை நினைவில் இல்லை என்றால் என் அப்பா அடிப்பட்ட உடன் நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டோம் அதன் பின்னிட்டு எந்த நிகழ்வுகளும் நடைபெறவில்லை. என்

அப்பவை தாக்கிய உடன் நாஙகள் சத்தம் போட்டோம் எங்கள் சத்தம் கேட்டவுடன் எதிரிகள் ஓடி விட்டனர். மருத்துவணையில் சிகிச்சையில் இருந்த போது நான் போலிஸாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமணைக்கு செல்லும் முன்பே எதிரிகள் மருத்துமணையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எதிரிகளை நாங்கள் தாக்கியதாக ஒரு வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் தான் எதிரிகளை தாக்கிவிட்டு ஓடும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது ஒரு பொய்யான சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையும் என் அப்பா, அம்மாவையும், என் தம்பி மற்றும் என் தம்பி மனைவியையும் அடிக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் சம்பவம் எங்கள் நிலத்தில் நடைபெற்றது பற்றியும் எதிரிகள் எங்களை தாக்கியது பற்றியும் மரங்களை வெட்டியது பற்றியும் மருத்துவரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரிகளை நாங்கள் தான் தாக்கினோம் என்றாலும், எதிரிகள் எங்கள் மீது கொடுத்த வழக்கில் இருந்து தற்காப்பிற்காக எதிரிகள் மீது பொய்யான புகாரை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மோனிஷ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K